தனிப்பிரதி விலை { பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 { 3-5-1947 சித்திரை௴ 20உ { மலர் 30

அரசியல் அரங்கில்?

(மணியம்மையார் திரட்டியது)

"பிரிட்டிஷ் மந்திரிகள் அறிக்கைக்கேற்ப, 1948 ஜூன் மாதத்திற்குப் பின் திருவாங்கூர் சமஸ்தானம் சுயேச்சை நாடாக விளங்கும். உலகில் எந்த நாடுகளுடனும் எவ்வித ஒப்பந்தத்தையும் நேரடியாகச் செய்துகொள்ளும் உரிமை இனித் திருவாங்கூருக்கு உண்டு. எந்த அரசாங்கத்திற்கும் அடங்கியோ, தயவை எதிர்பார்த்தோ திருவாங்கூர் இருக்கவேண்டிய நிலை அற்றுப்போய் விட்டது"

சர் சி. பி. ராமசாமி அய்யர்
(திவான்)

0 0

"சில சமஸ்தானங்கள் அ. நி. சபையில் சேராமல் ஒதுங்கியிருக்கின்றன. இந்திய யூனியனில் வந்து சேராத சமஸ்தானங்களை வருங்காலத்தில் விரோதிகளாய் பாவிக்க நேரிடும். எனவே விரைவில் ஒதுங்கியிருக்கும் சமஸ்தானங்கள் அ. நி. சபையில் சேரவேண்டுமென்று எச்சரிக்கை விடுக்கிறேன்"

—பண்டித நேரு.
(இடைக்கால சர்க்காரின் காங்கரஸ் மந்திரிகளின் முதல்வர்)

0 0

"அரசியல் நிர்ணயசபையில் முஸ்லீம் லீக் கலந்துகொள்ளாதது போன்று பெரிய சமஸ்தானங்களும் விலகியிருப்பது அரசியல் விவேகமுடைய செய்கையாகும். இன்று நடைபெறுவதாகக் கூறப்படும் அ. நி. சபை சத்தாவாதமானதல்ல. சரியான உடன்பாடு ஏற்படும்வரை அ. நி. சபையில் கலந்துகொள்ளாததுதான் புத்திசாலித்தனமாகும். காங்கரசாரின் மிரட்டலுக்குப் பயந்து ஒருசில சமஸ்தானங்கள் அ. நி. சபையில் சேர்ந்துள்ளதானது கவலைப்படவேண்டிய காரியமல்ல. அ. நி. சபையில் சேராத சமஸ்தானங்களைப் பண்டிதநேரு மிரட்டுகிறார். ஆகினும் அது அவரின் தனிப்பட்ட செய்கையேயன்றி இந்திய சர்க்காரின் சார்பான எச்சரிக்கையல்ல. எனவே அ. நி. சபையிலிருந்து விலகியுள்ள சமஸ்தானங்கள் தனிப்பட்டவின் மிரட்டலுக்கு அஞ்சவேண்டிய அவசியமில்லை.

—லியாகத் அலிகான்.
(இடைக்கால சர்க்காரின் லீக் மந்திரி முதல்வர்)

0 0

கருத்து:- "எனவே இப்போய்ப்பட்ட அற்பாயுசு அ.நி. சபையைப் பற்றிக் காரசாரமான வார்த்தைகளை இடம்பொருள் ஏவல் தெரியாமல் தோழர் பட்டேல்போன்றவர்கள் பயர்தார் செய்து என்ன பயன்? வேண்டுமானால் நாட்டில் வகுப்புக் கலவரத்திற்குத்தான் இந்த வெட்டிப் பிரசாரங்கள் வேரூன்றச் செய்தன என்பதோடு அ.நி. சபையும் வெறும் நாடகமாகவே முடிந்துவிட்டது என்று கூறலாம்.

☆

"காங்கரஸ் மந்திரி சபை [illegible] உருவெடுத்துவந்த அவதாரமாகிவிட்டது போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்திற்கும், சிறைக்கும், கொடுந்தண்டனைக்கும் உட்பட்டுச் சேவை புரிந்த வீரர்களின் தியாகத்தை இன்றை[ய] காங்கரஸ்காரர் விலைக்கு விற்கி[ன்]றனர்"

—ஆச்சார்யா கிருபாளினி
(சென்னைப் பேச்சு)

0 0

"வெள்ளையரிடமிருந்து சு[யராஜ்யம்] ராஜ்யம் வந்துவிட்டதால், இ[னி] காந்தியாருக்கு நாட்டில் வேலை யில்லை; காங்கரஸ் எதற்காக ஏ[ற்] பட்டதோ அக்காரியம் முடிந்து விட்டது"

—சர்தார்பட்டேல்

0 0

"காங்கரசின் வேலை முடிந்து விட்டது. அதன் திட்டம் நிறை வேறிவிட்டதாகக் காங்கரஸ் தலை வர்களே கூறுகின்றனர். அதாவது வெள்ளையனிடமிருந்து அதிகார[த்] தைப் பெறுவதுதான் காங்கர[ஸ்] லட்சியம். அது நிறைவேறிவிட்[ட] தாகக் கூறுவதால் இனிக் காங்க[ர]சுக்கு வேலையேயில்லை நாட்டி[ல்.] குறிப்பாகத் திராவிடநாட்டை[ப்] பொறுத்தவரை திராவிடர்கழக[த்] திற்குத்தான் இனி அதிக வேலை யிருக்கிறது. ஏனெனில் சமுக பொருளாதாரப் போர்தான் இ[னி] நடைபெறவேண்டியிருக்கிறது. அத்திட்டம் காங்கரசிலில்லை[;] திராவிடர் கழகத்திலிருக்கிற[து.] எனவே காங்கரஸ் திராவிடர்க[ளே] ஒன்று காங்கரசிலேயிருந்து வெ[ளி] யேறித் திராவிடர் கழகத்தில் வந்து சேருங்கள். அல்லது காங்கரசி[ல்] வது சமுகப் பொருளாதார வி[டு] தலைக்கான திட்டம் அமைத்[து] திராவிடர் கழகத்தைக் கலையு[ங்] கள்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி
(13-4-47ல் திருவாரூர் பேச்[சு])

0 0

"இன்றைய காங்கரசில், ம[க்க] ளுக்கு இன்று வேண்டிய சமுக[...]

ரோஜா முத்தையா

...ருளாதாரத்திட்டம் இல்லை.
...ட்டின் விடுதலை வந்துவிட்ட
...னர் அந்தந்த நாட்டின் சமூகப்
...ருளாதார விடுதலையால்தான்
...ட்டின் விடுதலையைக் காக்க
...டியும். எனவே அவ்விதத் திட்
...் இல்லாத காங்கரசைக் கலை
...விடுவதுகூட, நல்லதென்றே
...றுவேன்"

—தோழர் காமராஜ்.
(20-4-47ல் சென்னையில் பேசியது)

o o

கருத்து:- ஆக திராவிட நாட்டைப்
...ாளுத்தவரை காங்கரசுக்கு
...ி வேலையில்லையென்பதுடன்
...ங்கரஸ் திராவிடரும் இனியா
... இனஉணர்ச்சிபெற்று, திரா
... அரசுக்கு அடிகோலவேண்
...து அவசியமாகிவிட்டது.

☆

"எந்தத் தொழிலாளர் இயக்கம்
...ங்கரசை வளர்த்ததோ அதே
...தொழிலாள ர இன்று காங்கரஸ்,
...தலாளிபக்கம் நின்று அடக்கி
...றுகிறது அநியாயம் புரிகின்
.... எனவே அப்பேர்ப்பட்ட
...ி காங்கரசை உடனடியாக
...ித்தே தீருவேன்"

—திரு. வி. க.
(...சன்னைக் கடற்கரைப் பேச்சு)

o o

"சென்னையில் மின் தொழிலா
... கோரிக்கைகள் நியாயமான
...; அதுமட்டுமல்ல; மிகக்குறை
...னவை; இன்னும் கேட்டால்
...குரிமையே கேட்டிருக்கவேண்
...; எனினும் இவ்வளவு குறைந்த
...சகோரிக்கைகளைக் கேட்கும்
...தொழிலாளரையும் தாய்மார்களை
... காங்கரஸ் மந்திரிசபை அடக்கு
...றையால் கொடுமைசெய்து வரு
.... தொழிலாளர் தலைவர்
...ளைச் சிறை செய்கிறது; திராவி
... கழகம் தொழிலாளர் விடு
...லையே நோக்கியத் திட்டமாகக்
...கொண்டு பெருந்தொண்டு செய்து
...கிறது. எனவே நாளை திரு.
... க. அவர்கள் கைது செய்யப்
...வாரானால் அதே நிலையில்
...பிரக்கணக்கான திராவிடர்
...கத் தோழர்கள் சிறைபுகுந்து
...தொழிலாளர்கள் வெற்றிக்குப்
...படுவர் என்பதுடன் காங்

கரஸ் பாசிச போக்கை அழித்தே தீருவார்கள்"

பெரியார் ஈ. வெ. ரா.
(சென்னை கோகலே மண்டபத்தில் 10-4-47ல்)

கருத்து:- எந்தக் காங்கரசின் வளர்ச்சிக்கு முன்னாளில் கடுந்தண்டனைகளுடன் ஐந்து முறை சிறைசென்றாரோ அப்பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும், அதே காங்கரசின் வளர்ச்சிக்குத் தன் வாழ்நாளையே அர்ப்பணம் செய்துவந்த திரு. வி. க. அவர்களும் தங்களது அனுபவவாயிலாக இன்றைய காங்கரசின் பாசிசப் போக்கை எடுத்துக்காட்டுகின்றனர். எனவே இன்றைய காங்கரசிலிருக்கும் திராவிடர்களே! தொழிலாளர்களே! இனியாவது தேசிய ஏமாற்று வித்தையில் சிக்காதீர்கள். திராவிட இன உணர்ச்சி கொள்ளுங்கள்.

நினைவுநாள்

குரவப்புலம் தோழர் காசிநாதன் அவர்கள் தந்தையார் தோழர் பொன்னுச்சாமி அவர்கள் 6-4-47ல் இயற்கையெய்தியதன் காரணமாக 22-4-47ல் ஷியூர் தோழர் த. ஞ்சையா அவர்கள் தலைமையில் நினைவுநாள் கொண்டாடப்பட்டது. அதன் நினைவாகக் குடியரசு, திராவிடநாடு, விடுதலை ஆகியவற்றிற்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

அனுதாபம்

முன்னாள் நீதிக்கட்சியில் தொண்டாற்றிய தோழரும் திருச்செங்கோடு ஆவணப் பதிவாளர் தோழர் மு. இராசகோபால் பி. ஏ. அவர்களின் தந்தையாருமாகிய தோழர் பி. முருகேசன் (வயது 64) அவர்கள் 17-4-47ல் பழனியில் இயற்கையெய்தியமைக்குத் திருச்செங்கோடு திராவிட கழகத்தார் தங்கள் வருத்தத்தையும், அநுதாபத்தையும் காட்டிக்கொள்கின்றனர். இயற்கையெய்திய தந்தையின் நினைவாகத் தோழர் மு. இராசகோபால் பி. ஏ. அவர்களால் விடுதலை, குடியரசு, திராவிடநாடு ஆகிய இயக்கப் பத்திரிகைகளுக்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

'ஜெயவாணி'

(வாரப் பத்திரிகை)

☆

பல சிறந்த எழுத்தாளர்களின்
எழுத்தோவியங்கள்,
கதைகள்,
கவிதைகள், நிறைந்தது.

விலை அணா நான்கு

எங்கும் முன்பணம் கட்டக்கூடிய
ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு:-

'ஜெயவாணி'
தக்கோலம், அரக்கோணம்.

வெளிவந்து விட்டது! விற்பனைக்குத் தயார்!!

இராவண காவியம்

ஆசிரியர்—குழந்தை.

சிறப்புப்பாயிரம்—கவி பாரதிதாசன் அவர்கள்.
7பக்க ஆராய்ச்சி, முன்னுரை— தளபதி அண்ணாதுரை M. A. அவர்கள்.

இராம இராவணப்போர்— ஆரியர் தமிழர் போர் எனும் உண்மை கூறி, இராமாயணத்தால் தமிழர்க்குண்டாகிய இழிவைப்போக்கி, இனவுணர்ச்சியூட்டும் சமயச் சார்பற்ற தமிழ்ப்பெருங் காவியம்.

"நான் படித்தறியும்படி பாட்டுக்கள் எளிதாக இருக்கவேண்டும்" என்ற பெரியார் ஈ. வெ. ரா. சொற்படி அமைந்த எளிய இனிய 2828 தனித்தமிழ் விருத்தப்பாக்கள். டிம்மி 520 பக்கம்.

உயர்ந்த பதிப்பு. காலிகோ பைண்ட், கண்கவர் அட்டை, விற்பனையாளர்க்குத் தக்க கழிவுண்டு. தனிப்பிரதிக்குத் தபால் கூலி 10-அணா.

விலை ரூ. 6.

கிடைக்குமிடம்:-

சிவலிங்க விலாச புத்தகசாலை, ஈரோடு.

பாசறையில் பயிற்சி

ஈரோட்டில் திராவிட மாணவர் பிரச்சாரக் குழுவின் இவ்வாண்டு பயிற்சி 1-5-47 திராவிடர் கழகத் தலைவர் வழக்கறிஞர் டி. பி. வேதாசலம் அவர்களால் மாலை 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கப் பெற்றது.

சுமார் 60 மாணவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியார் முன்னிலையில் தலைவர் வேதாசலம் அவர்கள் திராவிட நாட்டுச் சரித்திரத்தைக் குறித்து,

"சரித்திரம் மக்களுடைய மனோ நிலையைக் குறிப்பதாக இருக்கவேண்டும் என்பதையும் பழங்கால மக்கள் மனோ நிலையில் எவ்விதமாகத் திருந்திவந்தார்கள் என்பதையும், திராவிடர்களின் நாகரிகம் உலக நாகரிகம் தோன்றிய காலத்திலேயே சிறந்துவிளங்கினஎன்பதையும்பழங்காலதிராவிடர்கள் வாழ்க்கைத் திறம் சுகாதார முறையோடு சிறந்திருந்ததுஎன்பதை ஹாரப்பா, மொகஞ்சதாரோ, முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புதைபொருளில் இருந்து காணக்கிடக்கின்றது என்பதையும், இரண்டாம் நூற்றாண்டிலிருந்து 11ம் நூற்றாண்டுவரை ஆண்ட சோழசேர அரசர்கள் சிறிது ஆரியத்திற்குக் கொடுத்ததால்தான் ஆலயங்கள் அனேகம் தோன்றினஎன்பதையும் விளக்கிக் காட்டினார்கள். பழங்கால திராவிடர் இமயம்வரை ஆட்சிபுரிந்தார்களென்றும், ஆரியர் வரவால் அவ்வாட்சி விந்தியம் வரை குறைந்தது என்றும், பின் சமீபகாலத்தில் அது வேங்கடம் வரை ஆயிற்று என்றும் குறிப்பிட்டார்கள். பழங்காலத்திலேயே சு. ம. இயக்கம் இருந்தது என்பதை ஜவகர்லால்நேரு அவர்கள் எழுதிய "டிஸ்கவரி ஆப் இந்தியா" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதையும் எடுத்துக்காட்டி விளக்கினார்கள்.

மாலை 6 மணியுடன் வகுப்பு சிறப்பாக அன்று முடிவுற்றது.

இதில் மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் கலந்துகொண்ட மாணவர்கள்:-

தோழர்கள்: மதியழகன், எ. பி. ஜனார்த்தனம், இரா. நெடுஞ்செழியன், அங்கமுத்து, இலக்குவன் திருநாவுக்கரசு, சிவராமன், தமிழரசன், ஆறுமுகம், கண்மணி, வேள்பாரி, செல்வன், இளங்கோவன், பாலசுப்ரமணியன், வையபெருமாள், திருத்தணிகாசலம், பழனிசாமி, சாது சுப்ரமணியன், ஜயாக்கண்ணு, கபிலன், ராமகிருஷ்ணன், நெடுஞ்சோழன், இளஞ்செழியன், கண்ணப்பன், நாராயணன், இனியன், இரா. எழினி, தமிழ்மணி, இராமசாமி, ஜெகநாதன், ஜார்ஜ், இழஞ்செழியன், முத்துசாமி, சிலம்பண்ணன், கணபதி, அமிர்தலிங்கம், இமயவரம்பன், பெரியசாமி, சுப்ரமணியம், சரவணன், தேவசகாயம், வெங்கடாஜலம், பெருமாள், அப்பாவு, அபிபுல்லா, திருமாவளவன், அறிவழகன், பூங்காவனம், செந்தமிழ்ச் செல்வன், மயில்சாமி, வீரமணி, சானகிராமன், சண்முகம், நாகரத்தினம், அழகப்பன். புலவர் ஆறுமுகம், துரைசாமி. பாப்பா அம்மாள்.

மறுநாள் காலை 9 மணிக்குத் தோழர் டி. பி. வேதாசலம் அவர்களால் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது. இன்று அரசியல், பொருளாதார நிலையும், 'திராவிடநாடும்' என்னும் பொருள் பற்றி வகுப்பு நடத்தினார்கள்.

இன்னும் மாணவர்கள் வந்துகொண்டிருக்கின்றனர்.

2-5-47 மாலையில் 4 மணிக்கு மாணவர்கள் மீண்டும் பாசறையில் பயிற்சிபெற பெரியார் தலைமையில் ஒன்று கூடினார்கள். 'திராவிட கழகம்' என்ற பொருள் பற்றி மாணவர்களைப் பேசுமாறு கேட்டுக்கொண்டார். பலமாணவர்கள் முன்வந்து பேசினார்கள். திராவிட கழகம் தோன்றியதற்குக் காரணம், திராவிடம் ஏன் தனித்திருக்கவேண்டும், இந்த இயக்கத்திலுள்ள இன்றியமையாத கொள்கைகள், திராவிடநாட்டின் எல்லை, திராவிட மொழிகள், திராவிடநாடு திராவிடருக்கு ஆக வேண்டிய அத்யாவசியம் இவைகளைப்பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

பெரியார் இறுதியுரையில் தன்மான இயக்கம் தோன்றி வளர்ந்ததைப்பற்றிக்கூறினார். திராவிட கழகத்தில் மற்ற இயக்கங்களில் இல்லாத கொள்கைகள் இருக்கின்றன. காங்கரஸ் வர்ணாச்சிரம தர்மத்தை ஆதரிக்கிறது. ஜாதிப் பிரிவுகளையும் பல உருவக்கடவுள்கள் ஆராதனையும் அழிக்க முற்படவில்லை. திராவிடர்களுக்குப் பல ஜாதிகளும், பல கடவுள்கள் ஆராதனையும் பண்டைக்காலத்திலே இருந்ததில்லை. இந்த நாட்டுச் சொந்த மக்கள் நாலாஞ் சாதியைச் சேர்ந்தவர்களென்றும், சூத்திரர்கள் (அடிமைகள் தாசி மகன்) என்றும் இழிவுபடுத்தப்படுகிறார்கள். வடநாட்டு ஆதிக்கத்தால் நாடு பொருளாதாரத் துறையில் நலிவடைகிறது. வளம்மிகுந்த நாட்டில் வறுமை தாண்டவமாடுகிறது. நோய்நாடி, அதுமுதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி, ஆவனசெய்து திராவிட சமூகத்தைக் காக்கவே திராவிட கழகம் தோன்றிற்று என்று கூறி இனிதே விளக்கினார்.

திராவிட கழகம் பார்ப்பனரல்லாதார் அதாவது ஆரியரல்லாதாருடைய கழகம். இதில் தமிழ் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவு, மொழிகள் பேசும் மக்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் வாழ்வதற்குரியதாக ஆக்குவதற்கே திராவிட கழகம் தோன்றிற்று. இக்கழகத்தை வேறு எந்தப் பெயரால் அழைத்தாலும் இவ்வியக்கத்தின் கொள்கைகளை விளக்கத்தவறும். இதை ஏன் தமிழர் கழகம் என்று அழைக்கக் கூடாது என்று சிலர் ஆராயாமல் கேட்டுவிடுகிறார்கள். தமிழர் கழகம் என்று அழைத்தால் மற்ற திராவிட மொழிகள் பேசும் மக்களை விலக்கி நிற்கும். பார்ப்பனர்களும் தமிழ் மொழி பேசுவதால் தமிழர் கழகத்தில் இடம் பெறுவார்கள். எனவே தமிழர் கழகம் ஆரியத்தையும் பார்ப்பனீயத்தையும் அழிக்கத் தவறிவிடும். திராவிட மக்களைப் பார்ப்பனீய

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

குடி அரசு

1947-ஆ மேமீ 3உ

காங்கரஸ் கலகலத்துவிட்டது

காங்கரஸ் ஏற்பட்டு அறுபது ண்டுக்கு மேலாகிவிட்டது.

அது பிரிட்டிஷார்நலத்துக்காகப் ரிட்டிஷாரால் துவக்கப்பட்டதும் ப்பாய் கலகத்தைக்கண்டு நடுங் ய பிரிட்டிஷார் ஒரு புதிய அரசி லமைப்பை உண்டாக்கிக் காண்டு தொல்லை இல்லாமல் ாழுவதற்குப் பல நாளாக யாசித்து யோசித்துத் தங்களைப் பாலவே இந்தியாவுக்கு ஒரு ன்னியனும், அன்னியர்களை தாவது தங்கள் இனத்தார் அல் ாத அன்னியரை அவர்களது உழைப்பைச் சுரண்டி வாழும்படி ானவனுமான ஒரு பொறுப்பற்ற சாம்பேறிக் (பார்ப்பனக்) கூட் த்தைப் பிடித்து அவர்க ளுக்குச் செல்வாக்கேற் ட்ச் சலுகைதந்து அச்செல்வாக் ின் பயனாய்ப் பாமர மக்களை மாற்றி வசியப்படுத்திக்கொண்டு ிரிட்டிஷார் நலத்துக்குப் பாடு டுவதை நாட்டு நலம் என்று ாமர மக்கள் கருதும்படியாகவும சய்யத்தக்க சூட்சித் திட்டங்க ளாடு இந்திய தேசிய காங்கரஸ் ன்ற பெயருடன் ஒரு ஸ்தாப த்தை உண்டாக்கி அதற்கு நல்ல லமும் செல்வாக்கும் ஏற்படும் டிச்செய்து வளர்த்து, காப் ற்றிப் பார்ப்பனர்களிடம் ஒப்பு க்கப்பட்டதுமாகும்.

ஆங்கிலேயர் தன்மைக்கு, ஆங் லாட்டு முறைப்படி ஏற்பாடு சய்யப்பட்டதாலேயே அதற்குக் ாங்காஸ் என்ற பெயரும் கொடுக் ப்பட்டது.

அதன் துவக்கத்தில் அதற்குத் லைவர்கள் வெள்ளை ளாக இருந்ததும்; காங் துவக்கப்பட்டு 10 ருஷகாலம் தொடர்ந்து ஒரு . . எஸ். வெள்ளையனே ாரியதரிசியாய் இருந்துவந்ததும், ற்றும் காங்கரஸ் தீர்மானங்கள் இராஜ [illegible] பிரிட்டிஷாரே என்றென்றும் இந்தியாவை ஆள அருள்செய்யவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தனை செய்வதுமே காங்கரசின் முக்கிய தீர்மானங்களாக இருந்து வந்ததும், சீனிவாச சாஸ்திரியார், விஜயராகவாச்சாரியார் போன்ற பார்ப்பனர்கள் ஐரோப்பாசென்று பிரிட்டிஷ் ஆட்சியைப் புகழ்ந்து பிரசாரம்செய்து மற்ற அரசர்களுக்குப் பிரிட்டிஷாரிடம் மதிப்பு வரும்படிச்செய்து மகாகனம், சர், முதலிய பட்டங்கள் பெற்றதும் இதன் பயனாகப் பார்ப்பனர்கள் அரசாங்கத்தில் சகலத்துறைகளிலும் ஆதிக்கம் பெற்றதோடு காங்கரஸ் என்பது பார்ப்பனர்களுடைய சொந்த சொத்தாக இருந்து வந்ததும் போதுமான ருஜுவாகும். அதோடு கூடவே காங்கரஸ் ஏற்பட்ட பின்னரே முஸ்லிம்களும், திராவிட மக்களும் அடியோடு பிற்பட்ட வகுப்பாராக (Backwaed communtiy யாக) ஆகவேண்டி வந்ததும் கல்வியில் இவர்கள் 100க்கு 10 பேரே படித்தவர்களாக இருக்கவும், பார்ப்பனர் 100க்கு 100பேரும் படித்தவர்களாக இருக்கவும் முடிந்தது என்பதும் எவரும் மறுக்க முடியாது. இந்தக் காங்கரசின் காரணமாகவே உத்தியோகங்கள் பெறுவதும், அவற்றின் பெரும் உத்தியோகங்கள், வக்கீல், ஜட்ஜு, டாக்டர், இஞ்சினீயர், உபாத்தியாயர்கள் ஆகிய பெரிய பதவிகள் 100க்கு 95 பார்ப்பனர்களுக்கே ஏகபோகமானதும் எவராலும் மறுக்க முடியாது.

இப்படிப்பட்ட காங்கரசானது தோன்றிய கால முதலே முஸ்லிம்களாலும், திராவிட மக்களாலும் முறையே 40, 30 வருடங்களாக எதிர்த்து அதன் சூட்சிகளை வெளியாக்கிக் கொஞ்சங் கொஞ்சமாகப் பார்ப்பன ஏகபோகத்தை உடைக்கத் தலைப்பட்ட காரணத்தால் காங்கரஸ் சிறிது சிறிதாகத் தீவிரவாதக் கட்சி என்பதாக மாறி மற்றவர்களின் எதிர்ப்பைச் சமாளித்துவந்ததானாலும் காங்கரசின் சூட்சியையும் வெள்ளையரின் வஞ்சகத்தையும் உணர்ந்த பார்ப்பனர் அல்லாத எல்லா மக்களும் காங்கரசுக்கும் அவற்றை அனைத்தும் காங்கரசின் சூட்சிக்குச் சாவுமணி அடிக்கும் தன்மை அதாவது பார்ப்பனர்களின் ஏகபோக தன்மை ஆட்டங்கொடுத்துவிட்டது. பார்ப்பனர்கள் இன்று முஸ்லிம்களாலும் திராவிடர்களாலும் ஒரு வெறுக்கப்பட்ட சமுதாயமாக ஆகிவிட்டார்கள்.

பார்ப்பனர்களுக்குச் செல்வாக்குக் குறைந்து. அவர்கள் ஆதிக்கம் ஆட்டம் கொடுக்க நேரிடுமானால் பிறகு பிரிட்டிஷாருக்கு இந்த நாட்டில் பாதுகாப்புக்கு இடமே இல்லாமல் போய்விடும் என்பதை உணர்ந்த பிரிட்டிஷார் மரியாதையாக வெளியேறவேண்டியவர்களாகி பார்ப்பனரோடு இரகசிய ஒப்பந்தம் பேசிக்கொண்டு பார்ப்பனர்களிடமே ஆதிக்கத்தை ஒப்புவிக்க அவசியமுடையவர்களாகிவிட்டார்கள்.

இதன் பயனாய்ப் பிரிட்டிஷார் "நாங்கள் போய்விடுகிறோம் உங்கள் நாட்டை நீங்கள் ஒப்புக்கொள்ளுங்கள்" என்று சொல்லவேண்டியவர்களாகிவிட்டார்கள். இதின்ருந்து காங்கரசுக்கு மேலும் மதிப்பு குறைந்து புதியபிரச்சினைகள் கிளம்பிவிட்டன. முஸ்லிம்கள், திராவிடர்கள், பிரிட்டிஷ்—ஆரிய(பார்ப்பன) ஒப்பந்தத்தை வெறுத்து தங்களிடம் நாட்டை ஒப்புவிக்கும்படி இன்று கேட்கிறார்கள். இதன் பயனாகத் "தேசியம்" செத்துவிட்டது, காங்கரசும் சாகவேண்டியதாகிவிட்டது. இந்த நாடும் மதம், இனம், ஜாதி என்பதாகப் பிரிய வேண்டிய அவசியம் வந்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷார் யோக்கியர்களாகக் காட்டிக்கொண்டு விட்டார்கள். இந்தப் பார்ப்பனர்கள் ஆதரவை நம்பி இனி ஆட்சிசெலுத்த முடியாது என்பதைப் பிரிட்டிஷார் நன்றாக உணர்ந்ததாலேயே "வெளியேறுகிறோம்" என்று சொல்ல முன்வந்துவிட்டார்கள். காங்கரசுக்கு இப்போது என்ன செய்வது என்பதே தெரியவில்லை. சர்வாதிகாரியாய் ஆக்கப்பட்ட காந்தியார் பஜனையும், பிரார்த்தனையும் செய்யும் காரியத்தில் ஈடுபட்டுவிட்டார். நாட்டில் கொள்ளை, கொலை, நாசவேலை

'குடி அரசு' 'ஜஸ்டிசைட்' வாசகர்களுக்கு

★

தற்காலிகமாக அடுத்தவாரம் முதல் 'குடி அரசு', 'ஜஸ்டிசைட்' பத்திரிகைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இன்னும் 2 அல்லது 3 வாரங்களில் ஷை பத்திரிகைகள் சென்னையிலிருந்து மிகச் சிறப்பான முறையில் வெளிவருவதற்கான ஏற்பாடுகளெல்லாம் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

என். கரிவரதசாமி,
ஆசிரியரும், வெளியிடுவோரும்.

[illegible] இருக்கிறது. பட்டேலும், பிரசாதும், நேருவுமான கனவான்கள் என்ன செய்வது என்பது தெரியாமல் தியங்கினார்கள்.

இப்போது மேற்கொண்டு காங்கரஸ்காரர்களால் யாரையும் வையவோ, யார்மீதும் விஷமப் பிரசாரம் செய்யவோ, யாரோடாவது கலகத்துக்கு, காலித்தனத்துக்குச் செல்லவோ இடமில்லாமல் போய்விட்டது. காங்கரஸ் கொள்கைகள் முதலாளித் தன்மை கொள்கைகளாகவும், நிர்வாகம் தங்கள் கையில் இருப்பதால் மக்களது மனச்சலிப்புக்கும் குறைபாட்டிற்கும் பதில் சொல்லவேண்டிய பொறுப்புடைவர்களாகவும், கம்யூனிஸ்ட்டுகளும் தொழிலாளர்களும சில்லரை சிப்பந்திகளும் காங்கரசிலிருந்து வெளியாக்கப்படவேண்டியவர்களாக ஆக்கப்பட்டு விட்டதாலும், காங்கரஸ்காரர்களுக்கு உள்ளாகவே பதவி வேட்டை, உத்தியோகவேட்டை, லைசென்ஸ், பர்மிட் வேட்டை தகராறுகளும், தேர்தல் போட்டிகளும் ஏற்பட்டுவிட்டதால் கலகத்துக்கும் காலித்தனத்துக்கும் ஆள் இல்லாமல் போய்விட்டதுடன் காங்கரஸ் ஆவேஷத்தால் மக்கள் பல்லாயிரக்கணக்காய்ப் பலியாகிப் பலகோடி ரூபாய் சொத்து நாசமாவதால் இன்று காங்கரஸ்காரர்களுக்கு (அதாவது பார்ப்பனர்களுக்கு) காங்கரசைக் கலைக்க வேண்டியதைத் தவிர வேறு வேலை இல்லாமல் போய்விட்டது.

காங்கரசின் வீரமெல்லாம் மங்கி மறைந்துவிட்டன. அவர்களது நிலைமை எல்லாம் வெறும் ஒரு சாதாரண மனிதன் நாடகத்தில் ராஜா வேஷம் போட்டு ஆர்ப்பாட்டமாய் ஆடிவிட்டு விடிந்து வந்து எஜமானிடம ஒடுங்கி நின்று சம்பளம் கேட்பவன் நிலைபோல் ஆகிவிட்டன.

1. தோழர் இராஜேந்திரப் பிரசாத் சொல்லுகிறார். என்ன சொல்லுகிறார்? "இந்தியாவானது சில சில மாகாணங்கள் கொண்ட தொகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டியது மாத்திரமல்லாமல் சில மாகாணங்கள்கூட சிறு சிறு துண்டாகப் பிரிக்கவேண்டியதான நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆகவே அந்தப்படிப் பிரிக்கப்பட வேண்டியதுதான் நியாயமாகும்" என்று சொல்லுகிறார்.

2. நேரு சொல்லுகிறார், என்ன சொல்லுகிறார்? "முடியாட்சியை நாங்கள் ஒழிக்கப் போவதில்லை. மன்னர்களின் ஆட்சி அப்படியே இருக்கலாம், அவர்கள் ஆட்சியில் நாங்கள் தலையிடுவது இல்லை" என்கிறார்.

3. பட்டேல் சொல்லுகிறார், என்ன சொல்லுகிறார்? "காங்கரசின் வேலை முடிந்துவிட்டது. இனி காங்கரசுக்கு வேலை இல்லை" என்கிறார்.

சென்னைமாகாண மந்திரி டாக்டர் ராஜனும் காங்கரஸ் இனி இரண்டொரு வருஷத்தில் மறைந்துவிடும்" என்கிறார்.

காங்கரஸ்காரர்களின் மற்றொரு கிளை ஸ்தாபனமான சோஷியலிஸ்ட் கட்சித் தலைவர் ஜெயப்பிரகாஸ் நாராயண் அவர்கள்,

"இன்றைய காங்கரஸ் யோக்கியதைப் பிரிட்டிஷாரை இந்நாட்டில் இருக்கவைக்க ஆதரவளிப்பதைவிட வேறு வேலை இல்லை" என்று சொல்லுகிறார்.

இவ்வளவு மாத்திரம்தானா என்றால் வெள்ளையர் வெளியேறிவிட்டால் இந்நாட்டிற்கு இந்தியா என்கின்ற பெயரே இருக்கமுடியாது. ஆதலால் காங்கரசுக்கு இந்திய தேசிய காங்கரஸ் என்று சொல்லிக்கொள்ள வகை இல்லாமலும் போய்விடும்.

ஆதலால் இப்போது இந்திய மத்திய அரசாங்க மந்திரிகள் மாதா மாதம் 5500 ரூபாய் வீதம் சம்பளம் பெற்று மூட்டைகட்டுவது தவிர இனி காங்கரசுக்கு உண்மையாகவே எவ்வித வேலையுமில்லை. என்றாலும் காங்கரஸ் தனது உயிர் வாழ்வுக்கு வேறு வகை தேடிக்கொண்டிருக்கிறது. அதுதான் உள்நாட்டுக் கலகங்களை உண்டாக்கிவிட்டு "என்னால் ஆள முடியவில்லை நீயே இனியும் சிறிதுகாலங்களுக்கு இருந்து சரிப்படுத்தி உங்கள் கையில் ஒப்புவித்துவிட்டுப் போ" என்பதேயாகும். ஆதலால் திராவிட மக்கள், திராவிடநாட்டைப் பொறுத்தவரையாவது பார்ப்பன சூட்சிக்கு ஆளாகாமல் உள்நாட்டு கலகங்களுக்கு இடம் தாராமல் ஒன்று சேர்ந்து உண்மைச் சுதந்திரத்தைப் பெற முயற்சிக்க வேண்டும்.

காங்கரஸ், கம்யூனிஸ்ட், திராவிட கழகம் என்கின்ற கட்சி பேதம் காட்டாமல் ஒன்றுபட வேண்டும். ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் கட்சிபோரால் போட்டி இடாமல் தனிப்பட்ட தகுதி ஆசை என்னும் பேரால் போட்டிப் போட்டுக்கொள்ளலாம் என்பதாகக் கருதி ஒத்துப்போகவேண்டும்.

காங்கரஸ் ஒழிந்தது என்பதில் இனி எந்தத் திராவிடரும் சந்தேகம் கொள்ளவேண்டியதில்லை.

வேண்டுகோள்

நெல்லைமாவட்ட தோழர்களுக்கு,

நமது மாவட்ட திராவிடர் கழ
த்தின் சார்பில் 20-4-47ல் தூத்
க்குடியில் பெரியார் அவர்களி
டம் 4444 ரூபாயும் 27-4-47ல்
காயில் பட்டியில் 250 ரூபாயும்
ஆக 4694 ரூபாய் கொடுக்கப்
பட்டிருக்கிறது. இன்னும் 306
ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கி
றது. என்னிடம் நிதி டிக்கட்
பெற்ற தோழர்களில் பலர் இன்
னும் பணத்தையும், டிக்கட்டு
களையும் அனுப்பாமலிருக்கிறார்
கள். ஆகவே தோழர்கள் சந்தர்ப்
பம் எடுத்துக் கொண்டு உடனே
அனுப்பக் கோருகிறேன். அல்லது
டிக்கட்டுகளையாவது அனுப்பி
விட வேண்டுகிறேன்.

நெல்லை மாவட்ட.

திராவிடர் கழகங்களுக்கு,

மாணவர்கள் 10547க்கு மேல
சுற்றுப்பிரயாணம் செய்யப் புறப்
படுகிறார்கள். பிற மாவட்டங்
களில் மாணவர்களைக் கொண்டு
கூட்டம் நடத்த தக்க முன்னேற்
பாடுகள் செய்யப்பட்டு வருகின்
றன. ஆனால் நமது மாவட்டத்
தோழர்கள் மட்டும் வாளா இருந்
துவிடுகிறார்கள். கூட்டங்
களுக்கு ஏற்பாடு செய்வதாக எவ
ரும் இதுவரையிலும் எனக்குத்
தகவல் கொடுக்கவில்லை. ஆகவே
தோழர்கள் இனியும் இவ்விதம்
இராது ஆங்காங்கு கூட்டம்
அமைக்க உடனே ஏற்பாடு செய்
வதுடன் எனக்குத் தகவல் கொடுக்
கவும் வேண்டுகிறேன்.

அன்பன்,
சே. கி. சே. சாமி,
செயலாளர்,
நெ. மா. தி. கழகம், தூத்துக்குடி.

தஞ்சை மாவட்டத் தோழர்களுக்கு,

திராவிட மாணவர் பிரசாரக்
குழுவினர் இம்மாதம் 12ந்தேதி
முதல் நமது மாவட்டத்தில் இரு
பகுதியினராகப் பிரிந்து பிரசாரத்
துக்குவருகின்றனர். ஒரு பகுதியி
னர் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி,
முத்துப்பேட்டை (?) துறைப்பூண்டி தாலுக்காக்
களிலும், மற்றொரு பகுதியினர்
மற்ற தாலுக்காக்களிலும் சுற்றுப்

பிரயாணம் செய்வர். ஆகவே
எல்லா ஊர்களிலுமுள்ள திராவிடர்
கழகத் தோழர்கள் உடனே
பொதுக்கூட்டங்களுக்கு ஏற்பாடு
செய்து எனக்கு அறிவிக்க வேண்
டுகிறேன். பட்டுக்கோட்டைப்
பகுதியிலும் விரைவில் ஏற்பாடுகள்
செய்யக் கோருகிறேன். கூட்ட
சம்பந்தமான விவரங்களுக்குக்
கீழ்க்கண்ட முகவரிக்கு எழுத
வும்.

V. S. P. யாகூப்,
விஜயபுரம் போஸ்டு,
திருவாரூர்.

பெரியார் துலாநிறை புகுவிழா

☆

அன்புடையீர்,

வணக்கம். 1947ம் ஆண்டு மே
மாதத்தில் திருவத்திபுரத்தில்
பெரியார் ஈ. வே. ரா. அவர்க
ளுக்கு, அவர்களின் தொண்
டைப் பாராட்டுவதன் அறிகுறி
யாகப் பெரியாரின் எடை அளவு
வெண்பொற்காசுகள், அளிப்பதென
முடிவு செய்துள்ளோம். நம் இயக்
கத் தோழர்கள் அனைவரும்
பொருளும் உழைப்பும் அளித்து
இவ்விழாவினைச் சிறப்புற நடை
பெறச் செய்யுமாறு உதவி செய்
தருள வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
சி. வே. சுப்பராயன்,
தலைவர்.
கா. கோவிந்தன் B.O.L.
வே, சோமு
அமைப்பாளர்.

தென்னாற்காடு மாவட்டத்
திராவிடத் தோழர்களுக்கு,

வருகிற மே திங்கள் இரண்டா
வது வாரத்தில் நம் மாவட்டத்தில்
பிரசாரம் செய்ய மாணவத்தோ
ழர்கள் வர இருக்கிறார்கள். அதற்
கான ஏற்பாடுகளும் அதிவிரை
வாகச்செய்யப்பட்டு வருகின்றன.
ஆகவே கூட்டம் நடத்த விரும்பும்
தோழர்கள் 6-5-47க்குள் கீழ்க்
கண்ட முகவரிக்குத் தெரிவிக்க
வேண்டுகிறேன்.

கு. த. பெ. பழநியப்பன்,
திராவிடர் கழகம், குறிஞ்சிப்பாடி.

திராவிடமாணவர் பேச்சுப் போட்டி

வெள்ளிக்கோப்பைகள் பரிசு

ஈரோட்டில் நடைபெறும் திரா
விட மாணவர் பிரச்சாரப் பயிற்சி
வகுப்பில் கலந்துகொள்ளும்
மாணவர்களிடையே ஓர் பேச்
சுப்போட்டி நடைபெறும். போட்
டியில் முதன்மையில் வெற்றி
பெறும் மாணவருக்கு ஒரு பெரிய
வெள்ளிக்கோப்பையும், இரண்டா
வதாக வெற்றிபெறும் மாணவ
ருக்கு ஒரு வெள்ளிக்கோப்பையும்
அளிப்பதாகக் கோவை மாவட்ட
திராவிடர் கழகச் செயலாளர்
தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்
கள் ஒப்புக்கொண்டுள்ளார்.

இயக்கச் செய்திகள்

30-3-47 ஞாயிறன்று மாலை 3-30
மணிக்குத் தாராவி [பம்பாய் 17] "திரா
விடநாடு பகுத்தறிவு நிலையத்தின்"
4வது ஆண்டு 2வது மாதாந்திரக் கூட்
டம் தோழர் எஸ் டி. சவரிதாசன் அவர்
கள் தலைமையில் நடைபெற்றது. தலை
மையாளர் எஸ். டி. சவரிதாசன் அவர்
கள் தந்தையும் தாயும் முறையே 10-3-47
லும், 22-3-47லும் இயற்கையெய்தியது
குறித்து தோழர் சவரிதாசனுக்கு நிலை
யத்தின் சார்பில் அநுதாபம் கூறப்பட்
டது. கூட்டுச்செயலாளர் தோழர் எஸ்.
சுப்பையா அவர்களின் வாழ்க்கைத்
துணைவியார் 13-3-47ல் பெண் மகவு
ஈன்றதற்கு அவர் மகிழ்ச்சி கூறி அதன்
நினைவாக நிலையத்திற்கு ஒரு ரூபாய்
நன்கொடையளித்தார். திராவிடர் கழகத்
தலைவர் தோழர் டி. பி. வேதாசலம்
அவர்கள் பம்பாய் செல்லுவதையறிந்து
அவர் வருங்கால் வரவேற்பளிப்பதென
வும் முடிவு செய்யப்பட்டது.

15-3-47 இரவு 8 மணிக்குப் பொன்
னாச்சி தோழர் அ.ச. பாலசுப்பிரமணி
யன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற
திராவிடர் வாலிப கழகத்தின் நிர்வாகக்
கமிட்டியில் கழகத்தின் சார்பாக ஏப்ரல்
மாதத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடத்த
ஏற்பாடு செய்வது என்றும், கழகத்தலை
வரின் முயற்சியால் ஏற்படுத்தப்பட்ட
'ஆராய்ச்சிப் பதிப்பகத்தின்' முதல் வெளி
யீடாகத் தோழர் பி. என். இராமானுசம்
அவர்கள் எழுதிய "சாமான்யசாரக் கட
வுள்கள்" என்னும் நூலை வெளியிடுவ
தற்கு மகிழ்ச்சி தெரிவித்தும் தீர்மானங்
கள் நிறைவேற்றப்பட்டன,

திருவாரூர் நிதியளிப்பு விழா

13-4-47 மாலை திருவாரூர் திராவிட கழக நிதியளிப்புவிழா கொண்டாடப்பட்டது. இதுவரையில் திருவாரூரில் நடைபெறாத பெரியஊர்வலமும், வாழ்த்தொலிகளும், அணிவகுப்பும் திருவாரூரையே ஓர் பெரும் புதுமைக்குத் தயாராக்கிவிட்டதென்று கூறலாம்.

காலை 8-மணிக்குத் திருவாரூர் புகைவண்டி நிலையத்தில் வந்திறங்கிய தலைவர் பெரியார் அவர்களும், தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ., என். வி. நடராசன், தோழியர் மணியம்மையார் ஆகியோர்களும் பெரிய வாழ்த்தொலிகளுக்கிடையே வரவேற்கப்பட்டு தோழர் ஆர். சிங்கம் அவர்களுடைய இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிதியளிப்பு விழாவிற்கென தஞ்சை மாவட்டத்தின் பல ஊர்களிலிருந்தும், தென்னார்க்காடு திருச்சி, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களிலிருந்தும் பல தோழர்கள் வந்தனர்.

தோழர் ஆர். சிங்கம் அவர்கள் இல்லத்தில் பெரியார் அவர்களுக்கும் வெளியூர் தோழர்களுக்கும் பகல் உணவு விருந்து மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பிறகு மாலை 3மணியிலிருந்தே ஊர்வலம் புறப்பட இருந்த புலிவலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமிவிட்டனர்.

சரியாக 4மணிக்குப் பெரியார் அவர்களும் மற்ற தோழர்களும் புலிவலம் வந்து சேர்ந்தவுடன் கழகத்தாரால் புகைப்படம் எடுக்கப்பட்டு, தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

பின்பு பெரியார் அவர்களும் தோழர் க. அன்பழகன், டி இராசய்யா, நடராசன், ஆகியோர்கள் காரிலே அமர்த்தப்பட்டு, தோழர்கள் வி. ஜி. இரங்கராசு, [illegible] சிங்கம், தோழர்கள், சுந்தர லீலா [illegible], ராதாபாய் ரங்கராசு, ராமாமிருதம்மையார் ஆகியோர் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது.

ஊர்வலத்தில் 5000க்கு மேற்பட்ட கருஞ்சட்டைப் படையினரும், 200க்கு மேற்பட்ட கருஞ்சேலையுடுத்திய தாய்மார்களும் கலந்துகொண்டனர், பல ஆயிரக்கணக்கான பொதுமக்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். வழிநெடுக வரவேற்புகளும், தலைவருக்கு மாலை அணிவிப்பும் நடைபெற்றன. பல இடங்களில் புகைப்படமும் எடுக்கப்பட்டது.

பெருத்த வாழ்த்தொலிகளுடன் பல்லாயிரக் கணக்கான மக்களுடன் மாலை 7மணிக்கு விழா மண்டபமாகிய செல்வம் நிலையத்திற்குச் சென்றது. ஊர்வலம் மிகச் சிறப்புற நடைபெறுவதற்கு முதற்காரணம் தோழர் மு. கருணாநிதியவர்களின் சிறந்த முயற்சியால் செய்யப்பட்ட விளம்பரம்தான் என்று கூறலாம். தோழர்கள் திருத்துறைப்பூண்டி மணி, நாகை பக்கிரிசாமி, முத்துகிருஷ்ணன் ஆகியோரின் முயற்சியும் ஊர்வலச் சிறப்புக்குக் காரணமாகும்.

பொதுக்கூட்டம் தோழர் டி. இராசய்யா அவர்கள் தலைமையில் தொடங்கியது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழியர் சுந்தரலீலா சிங்கம் அவர்கள் ஆரூர், திராவிடப் பெண்கள் தொண்டர் படை சார்பில், பெரியார் அவர்களுக்கு ஒரு வரவேற்பிதழ் வாசித்தளித்து ரூ 184 கொண்ட பணமுடிப்பும் அளித்தார்கள். ஆரூர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சார்பில் 101 காலணாக்கள் கொண்ட முடிப்பும், சிறுவன் இளங்கோவால் காலணாக்களால் கட்டப்பெற்ற மாலை ஒன்றும், தோழர் ஏ. எஸ். மணியால் ரூபாய் இரண்டும் செங்கடங்கால் தி. க தலைவர் சந்தானம் அவர்களால் 1001 காலணாக்கள் கொண்ட முடிப்பு ஒன்றும், அவ்வூர் பெண்கள் சார்பில் 101 அணாக்கள் கொண்ட முடிப்பு ஒன்றும் அளிக்கப்பட்டன. பல கழகத்தின் சார்பில் பெரியாருக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பிறகு தஞ்சை மாவட்ட நிதியின் இரண்டாவது பகுதியான 2150 ரூபாய் கொண்ட பணமுடிப்பு தோழர் வி ஜி. ரெங்கராசு அவர்களால் பெரியாரிடத்தில் அளிக்கப்பட்டது.

பிறகு சொற்பொழிவு தொடங்கியது. முதலில் தோழர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் பேசினார். பின்னர் என். வி. நடராசன், புலவர் அழகரையா, டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசியபின் தலைவர் பெரியார் அவர்கள் 2½ மணி நேரம் நீண்டதோர் சொற்பொழிவு 'தற்கால அரசியல் நிலைமை குறித்து' ஆற்றினார்.

பின்னர் இசைப்போட்டியில் வெற்றி பெற்ற தோழர்களுக்குப் பெரியார் பரிசு வழங்கினார்.

ஏ பிரிவிலிருந்து சென்னை மாகாணம் பிரிக்கப்படவேண்டும் என்றும், திராவிடர் கழகத் தலைவரைக் கலந்து செய்யாத அரசியலைத் திராவிடர் கழகம் ஒப்புக்கொள்ளாதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இரவு 10-15 மணிக்கு முடிவுற்றது. இரவு 11மணிக்குத் தோழர் மு. கருணாநிதி இயற்றிய 'பிரேத விசாரணை' என்ற நாடகம் நடிக்கப்பட்டது.

திருக்கழுகுன்றத்தில் 27-4-47ல் தோழியர் குஞ்சிதம் குருசாமி அவர்கள் தலைமையில் தோழர் செல்வராசனுக்கும் தோழியர் செலலட்சுமிக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

காலஞ்சென்ற பழயகோட்டை பட்டகாரர் நினைவுச் சின்னம்

18-4-47 வெள்ளிக்கிழமை மாலை 6மணிக்குப் பழயகோட்டை புதூரில் தோழர் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது காலஞ்சென்ற, பழயகோட்டை பட்டக்காரர் ராய்பகதூர் என். நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் அவர்கள் நினைவாக ஓர் நினைவுச்சின்னம் நிறுவுவதென முடிவுசெய்து ஓர் கமிட்டி நிறுவி அக்கமிட்டிக்குத் திவான்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் தலைவராகவும், தோழர் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் உபதலைவராகவும். 4 காரியதரிசிகளும் 30 மெம்பர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

பிறப்பு

தோ. ஜேடர்பாளையம் தோழர் அ. கந்தய்யன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ராஜம்மாளுக்கு 14-4-47 திங்கட்கிழமை பிற்பகலில் ஓர் ஆண் மகவு பிறந்தது. அதன் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிடியிலிருந்து விடுவிக்கமுடியாமல் போய்விடும். திராவிட மொழிகளுக்குள்ளே மிகவும் ஒற்றுமையிருக்கிறது. 5மொழி பேசிவரும் திராவிட மக்களுக்குத் தனி நாகரிகம், தனி கலை, தனி வாழ்க்கை முறை இருக்கின்றன. திராவிடநாடு ஆங்கிலேய ஆட்சிக்கு உட்படும் வரையில் தனித்தே இருந்தது. எனவே திராவிடநாடு திராவிடருக்குரியதாகத் திராவிடநாட்டைத் திராவிடர் அடையவேண்டும். திராவிடநாட்டிற்குத் தனி அரசியல் உண்டு. திராவிடநாட்டில் மொழிவாரியாக தனி ஆட்சியிருந்தாலும் 5 மொழிகள் பேசும் மக்களின், பிரதிநிதிகள் கொண்ட ஒரு கூட்டுச் சபை அமைக்கவேண்டும். வெளிநாட்டு விவகாரங்களை இந்த கூட்டுச்சபையே கவனித்துவரும். எனவே திராவிட நாட்டிற்கும், திராவிட மக்களுக்கும், திராவிடகழகம் இன்றியமையாததாக இருக்கின்றது.

சுமார் 5½மணிக்குப் பயிற்சி முடிவுற்றது.

மாயவரம் தாலுக்காவில் ஆதித்திராவிடர் பொதுக் கூட்டங்கள்

ஆதித்திராவிடர்களின் முன்னேற்றங் குறித்துக் குறிப்பிட்ட சில ஆதித்திராவிட வாலிபர்கள் மாயவரம் தாலுக்காவில் கிராமங்தோறும் சென்று சொற்பொழிவாற்றி வருகிறார்கள்.

0 0

23-3-47ல் ஆலவேலி கிராமத்தில் சித்தக்காடு கே. தோழர் இராமையா அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கடலூர் இறுவன் வீரமணி, மாயவரம் தோழர்கள் சௌந்திராசன், ம. கோவிந்தராசன், அறிவழகன், என். எஸ். ராசாங்கம், என். எஸ். வீரய்யா ஆகியோர் ஆதித்திராவிடர் முன்னேற்றங்குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள்.

0 0

24-3-47ல் கீழையூர் கிராமத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

0 0

25-3-47ல் சோழம்பேட்டையில் என். எஸ். வீரய்யா அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் குடந்தை தோழர்கள் எஸ். கே. சாமி, பாவலர் பாலசுந்தரம், சித்தக்காடு தோழர் கே. இராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

0 0

26-3-47ல் மன்னிப்பள்ளத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

0 0

27-3-47ல் கள்ளிக்காட்டில் தோழர் கே. ராமையா அவர்கள் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் கே. ராமையா முன்னுரையாக உரைக்கமாகவே பேசினர். சொற்பொழிவாற்றினார். பின்னர் பாவலர் பாலசுந்தரம் பேசியபின் தோழர் என். எஸ். ராஜாங்கம் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

வாழ்க்கை ஒப்பந்தம்

கடலூரைச்சேர்ந்த புதுவண்டிப்பாளையம் தோழர் அ. பழனியாண்டி அவர்கள் மகன் தோழர் அண்ணாமலைக்கும், செல்லப்பெருமாள் பேட்டை தோழர் வைத்தியலிங்கம் அவர்கள் மகள் தோழியர் இராசாம்பாளுக்கும் கடலூர் O.T. இராமலிங்கம் அச்சுக்கூடத்தின் உரிமையாளர் தோழர் வள்ளலார் அவர்கள் தலைமையில் 25-4-47 வெள்ளிக்கிழமை தமிழ்த் திருமணம் நடைபெற்றது. அதன் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்

பள்ளிபாளையம் பொதுமக்கள் கூட்டுறவு பண்டகசாலையில் ஆரியர் ஆதிக்கம்

பள்ளிபாளையம், 5-4-47.

ஆசிரியர் அவர்களே!

பள்ளிபாளையம் கூட்டுறவு பண்டகசாலையில் 3-3-47லிருந்து 7-3-47வரை உணவுப்பொருள் இருப்பு இல்லை என்று சொல்லப்பட்டுவந்தது. பிறகு 8-3-47ல் உணவுப்பொருள் வழங்கப்பட்டது. அன்று எல்லோருடைய உணவுச்சீட்டுகளையும் வாங்கி வைத்துக் கொண்டு ஒரு சில சீட்டுகளுக்கு மட்டும் உணவுப்பொருள்கள் வழங்கினார்கள். மீதியுள்ள சீட்டுகளுக்கு 'அரிசி இல்லை' என்று கூறி, 'மக்காச்சோளம் இருக்கிறது' வேண்டுமானால் வாங்கிச் செல்லலாம்' என்று சொன்னார்கள்.

இதைக்கேட்ட பொதுமக்கள் 'இவ்வாரத்தில் உணவுப்பொருள் வழங்குவது இன்றோடு முடிவடைகிறதே' என்று மனமுடைந்து நின்றனர். அப்போது இவ்வூரில் சுமார் 65 ஆண்டுகளாகப் பொது மக்களுக்குச் சேவை செய்துவரும் தோழர் ம. சுப்பிரமணியம் அவர்களும் திராவிட கழக உறுப்பினராகிய தோழர் எ. இராங்கசாமி அவர்களும் பொதுமக்களின் சார்பாக இவ்வூர் பொதுமக்கள் கூட்டுறவு பண்டகசாலையின் செயலாளரும், கிராம உணவுச் சங்கத்தலைவருமான என். இ. மணி அய்யர் என்பவரிடம் சென்று பொதுமக்களுக்கு ஏற்பட்ட குறையை எடுத்துக்கூறி முறையிட்டனர். அதற்கு அவர் 'இருப்பதை வாங்கிக்கொண்டு போங்கள். வீண் கூட்டம் கூடாதீர்கள். உங்களுக்கு இதே தொழிலாகிவிட்டது' என்று வாய்க்கு வந்தவாறு திட்டி 'இல்லாதீர்கள், வெளியே போங்கள்' என்று விரட்டினார். இதைப் பொறுக்காத இருவரும் மற்றுமுள்ளவர்களும் தங்களிடம் நீதி வேண்டி வந்ததற்குத் தாங்கள் கொடுத்த நீதி இது தானா' என்று சொல்லி அமைதியாக வீடு திரும்பினர்.

உடனே என். இ. மணி அய்யர், இலாகாவுக்கு அறிவித்து திராவிடர் கழகத் தோழர் எ. இராங்கசாமி என்பவர் பேரில் மாத்திரம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் படிச் செய்துவிட்டார். தோழர் இராங்கசாமியும் அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்கஞ்சி ஒழுங்குநடவடிக்கைக்கு வகையொப்பமிட்டுவிட்டார்.

தோழர் இராங்கசாமி திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால்தான் அவர்பேரில் ஒழுங்குநடவடிக்கை எடுக்கச்செய்தார் மணி அய்யர் என்று நினைக்கவேண்டியுள்ளது. இதனால் மணி அய்யர் திராவிடர் கழகத்தையும், திராவிடர் எழுச்சியையும் அடியோடு அழித்துவிட்டதாகக் கருதி பெருமிதங்கொண்டு மகிழ்கிறார். மணி அய்யரைப் போன்ற ஆரியர்களின் அட்டகாசம் இன்னும் எத்தனை நாளைக்கோ!

திராவிடர் கழகத்தார்,
பள்ளிபாளையம்.

கிருஷ்ணன்—பாகவதர் விடுதலை மகிழ்ச்சி

கலைவாணர்களாகிய என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராச பாகவதர் ஆகியோர்களின் விடுதலையை முன்னிட்டுக் குடியரசு, விடுதலை, திராவிடநாடு ஆகிய பத்திரிக்கைகளுக்குச் சேலம் செவ்வாய்ப்பேட்டை சுந்தரஞ்செட்டித் தெரு பீடிகடை தோழர் கே. ச. பழனியப்பா அவர்களால் நன்கொடையாக இரண்டு இரண்டு ரூபாய் கொடுக்கப்பட்டது.

0

கலைவாணர்கள் தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், எம். கே. தியாகராச பாகவதர் ஆகியோரின் விடுதலைக்காகப் பாலக்காடு எம். எஸ். டி. எஸ். சபா நடிகர்கள் ஜி. எம். கிருஷ்ணன், என். எஸ். கருப்பய்யா ஆகியோர் மகிழ்ந்து குடியரசு வளர்ச்சிக்கு ஒவ்வொரு ரூபாய் நன்கொடையளித்தனர்.

விற்பனைக்குத் தயார்!

எங்களிடம் 'குடி அரசு' பத்திரிகைகளை ஒவ்வொரு வருடமும் தனித்தனியாகப் பைண்டு செய்து, அதாவது 4-வது வருடம் முதல் 5, 6, 7, 8, 9, 11, 12, 13, 15 17, 18, 19வது வருடம் வரையில் உள்ள வால்யூம்கள் விற்பனைக்குத் தயாரில் இருக்கின்றன. ஒவ்வொன்றின் விலை ரூ. 7-8-0. சொற்ப வால்யூம்களே கைவசம் இருப்பதால், பாதித்தொகை முன்பணத்துடன் தேவைக்கு ஆர்டர் கொடுக்கவும். வால்யூம்களை இரயில்வே பார்சல் மூலம் பெற்றுக்கொள்ளவசதி உள்ளவர்களுக்குச் செலவு குறையும்.

குறிப்பு:- 16வது வருட குடி அரசு பைண்டு வால்யூம் மட்டும் நான்கு மாதங்கள் கொண்டதாக இருப்பதால் அதன் விலை ரூ. 3-0-0.

குடி அரசு பதிப்பகம், ஈரோடு

Edited, Printed, and Publish[ed by]
N. Karivaradasamy at the [...]
P[ress] 42, Catcherystreet, E[rode]

ரோஜா முத்தையா